# சாரதை





## இந்து மன்றம்

**தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி**

(தேசிய பாடசாலை)

**திருக்கோணமலை**

**2017**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் சமர்ப்பணம்



இந்துவின் அகம் தனிலே வீற்றிருந்து
இன்னருள் பாலித்து நிற்கும்
சக்தி மிக்க சித்தி விநாயகரே
சந்ததம் உன் பாதம் பணிந்திடுவோமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

திருக்கோணமலை வலயத்தின் திருக்கோணமலைக் கோட்டப்பகுதியிலே அமைந்துள்ள தி/தி.இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியானது தனக்கொரு தனியான கலாச்சார விழுமியங்களைக் கொண்டு சிறந்ததோர் மாணவ சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் வருடந் தோறும் பல்வேறுபட்ட பணிகளைச் சிறப்பாக முன்னெடுத்து வருவது கல்லூரியின் பெருமையினையும், ஆற்றலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இக்கல்லூரியின் இந்துமன்றத்தினரின் ஆன்மீக ஈடேற்றத்திற்கான செயற்பாடுகளான சமூகசேவை, ஆலயத்தொண்டு, சமயநிகழ்வுகள், சமயப்போட்டிகள், பரிசுவழங்கல் என்பவற்றுடன் மாணவர்கள், ஆசிரியர்கள், பெரியார்களது ஆக்கங்களை தாங்கிவருகின்ற வரலாற்று ஆவணவெளியீடான சாரதை சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும்,

"உனக்கு மனஅமைதி வேண்டுமானால் யாருடைய குறையையும் காணாதே.
உன்குறைகளையே பார். உலகத்திலுள்ள எல்லோரையும் உனதாக்கிக் கொள்.
யாருமே அன்னியர் அல்லர். உலகம் முழுவதும் உனது உறவே.!"

என்ற பொன்னான கூற்றை முன்வைத்தவர் அன்னை சாரதாதேவி அவர்கள்,

அம்மா என்றால் அன்பு. அவள் தான் அன்னை மகாசக்தி. இச்சஞ்சிகையானது அன்னைசாரதாதேவி அவர்களின் பெயரைத் தாங்கிவருவது ஓர் தனிச்சிறப்பு.

இத்தருணத்தில் இச்சஞ்சிகை வெளிவருவதற்கு காரணகர்த்தாக்களாக செயற்பட்ட அனைவரையும் பாராட்டுவதுடன் ஆண்டுதோறும் இச்சஞ்சிகை வெளிவர இறைவனது ஆசியையும் வேண்டி நிறைவு செய்கிறேன்.

ந.விஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்விஅலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரியின் இந்து மன்றத்தினால் வெளியிடப்படும் "சாரதை" சஞ்சிகையானது மாணவர்களது ஆக்கத் திறன் விருத்திகளை வெளிக்கொண்டுவருவதுடன் சமயம் சார்ந்த ஓர் சஞ்சிகையாகும். இதனூடாக மாணவர்களது சமய ஈடுபாடும் எண்ணங்களையும் பிரதியலிப்பதற்கான ஓர் வாய்ப்பாக இச்சஞ்சிகை அமைகின்றது.

இந்து மன்றத்தினர் ஒவ்வொரு வருடமும் நவராத்திரி தினத்தையொட்டி சமய அறிவுஎழுத்துப்பரீட்சை பேச்சுப்போட்டி, கோலம் போடுதல், மாலை கட்டுதல் போன்ற பல போட்டிகளை நடத்தி மாணவர்களிடையே சமய ஈடுபாட்டினை வளர்த்து வருவதுடன் கலைப்பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் நோக்கில் நவராத்திரி கலை விழா என்ற நிகழ்வை நடத்துவதும் சமூக சமய தொண்டாற்றியவர்களை கௌரவிப்பதும் இந்நாளில் நடைபெறுவது பாராட்டத்தக்கது.

இந்நிகழ்வில் 4வது சாரதை வெளிவருவதையிட்டு மகிழ்வடைவதுடன் இந்த முயற்சியில் ஈடுபடும் இந்து மன்ற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

திரு. செல்வரெட்ணம் பத்மசீலன்
அதிபர்
தி / இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர்கள் உள்ளத்திலிருந்து

ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்கும் "சாரதை" என்ற சஞ்சிகையை எமது இந்து மாணவர் மன்றம் நான்காவது முறையாக பிரசவித்திருப்பதை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மன்றத்தினால் செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளையும், மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் சுமந்து வரும் இச் சஞ்சிகை மாணவர்களின் ஆன்மீகப் பாதையைச் செப்பனிட உதவும் என்பதில் ஐயமில்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இம்மலர் விருட்சமாக வளர உதவிய அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நடாத்தப்பட்ட போட்டிகளுக்கு நடுவர்கள் எனப் பலவழிகளிலும் உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

திருமதி. ம. சண்முகதாஸ்
இந்து மன்றப் பொறுப்பாசிரியர்
தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா
இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதற்குள் உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர் தத்துவம் | 1 |
| 2. | விநாயகர் | 3 |
| 3. | சைவ சமயத்தவர் முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர் | 4 |
| 4. | விநாயகரும் தோப்புக்கரணமும் | 6 |
| 5. | அறுகம்புல்லின் சிறப்பு | 8 |
| 6. | சைவ ஒழுக்கங்கள் | 9 |
| 7. | சமய சின்னங்களுள் உருத்திராக்கம் | 10 |
| 8. | சைவ வாழ்க்கை | 12 |
| 9. | நல்லவருடன் சேருவோம் | 15 |
| 10. | ஆலய வழிபாடு | 17 |
| 11. | எனக்குப் பிடித்த அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் சிந்தனைத் துளிகள் சில... | 19 |
| 12. | இறைவனும் அவனது அருட்கொடையும் | 21 |
| 13. | திருநீற்றின் மகிமை | 24 |
| 14. | திருஞானசம்பந்தர் | 25 |
| 15. | "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" | 27 |
| 16. | நவராத்திரி வழிபாடு | 29 |
| 17. | சுவாமி விவேகானந்தர் | 31 |
| 18. | தேசிய விழாவாகப் போற்றப்படும் நவராத்திரி | 33 |
| 19. | திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம் | 35 |
| 20. | சமய திருவிழாக்கள் | 38 |
| 21. | மகாபாரதம் உணர்த்தும் குரு பக்தி | 39 |
| 22. | இந்து கணிதவியல் | 41 |
| 23. | ஆன்மவியலும் அறிவியலும் | 44 |
| 24. | நவராத்திரிப் போட்டி முடிவுகள் | 46 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் மன்றக் குழு
# 2016-2017

காப்பாளர் : திரு .செ. பத்மசீலன்
மன்றப்பொறுப்பாசிரியர் : திரு. ஏ. ஜெகதீசன்
தலைவர் : செல்வன் வ.அபிலக்ஷன்
உபதலைவர் : ஸ்ரீதரன் அனோஜன்
செயலாளர் : த.ஜனன்
உபசெயலாளர் : கமலேந்திரன் கிஷான்
பொருளாளர் : மோ.சாயிகேதாரன்

## ஆசிரியர் குழு

திருமதி : ம. சண்முகதாஸ்
திருமதி : ந. சுபேந்திரன்
திருமதி : த. நிஷாந்தினி
திருமதி : க. சபாலிங்கம்
திருமதி : த. சிவகாந்தன்
திருமதி : ம. ரவிதாஸ்
திருமதி : க.இரட்ணசிங்கம்
திருமதி : ரா. புவனேஸ்வரன்
திருமதி : க. ஜனனி

## வகுப்பு பிரதிநிதிகள்

வி.அக்ஸசரன்
ம.டனுக்ஷன்
ஜ.பவீக்ஷன்
அ.டனுஜன்
உ.டிலக்ஷன்
ச.பிரனீஸ்
ச.தனேஷ்வரன்
அ.லக்ஷிதன
ர.ஷரோன்நாத்
சி.கரிகாலன்
ஜெ.திவாஷகர்
பி.கிவாஷன்
ஜெ.கிதுஷாந்
ல.அஜேசாந்
கு.டாகினீஷன்
க.ஹீருத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தத்துவம்

க.லோகிஷன்
12 Maths B

## யானை முகத்தத்துவம்

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது. யானைக்கு மேதாசக்தி அதிகம். மேலும் யானையின் காதுகள் பெரிதாக இருப்பதால் நுண்ணிய சத்தத்தைக் கூட அதனால் கிரகிக்க முடிகின்றது. இறைவன் புகழைக் கேட்பது என்கின்ற ஆன்மீக சாதனையின் முதற்படிக்கு காதுகள் கூர்மையாய் இருப்பது அவசியம். யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக் கொள்கிறது. தேவையற்றவையை உதறிவிடுகிறது. நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்கிறது. இவ்வாறு மனித குலத்திற்கு தேவையான பாடங்களை விநாயகர் நமக்கு கற்றுத் தருகின்றார்.

## மூஷிக வாகனத்தின் தத்துவம்

அவரது வாகனம் மூஷிகம். மூஷிகம் இருளில் தான சஞ்சரிக்கும். அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும். வாசனையைக் கொண்டே எந்தெந்த உணவுப்பொருள் எங்கிருக்கின்றது எனக் கண்டு கொள்ளும். ஆன்மிகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும், வாசனை என்பது ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாக்கி கொண்டு உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் விரத நிவேதனப் பொருள் தத்துவம்

விநாயகர் சதுர்த்தியிலே விசேடமான உணவுப் பண்டங்கள் கடவுளிற்கு நிவேதனமாய் அளிக்கப்படும். அப்பண்டங்கள் நீராவியால் தயாரித்தவை அல்லது எள் அறுவடை ஆகும். எள்ளானது சுவாச நோய்களையும் கண் நோய்களையும் தீர்க்கவல்லது. நீராவி பண்டங்கள் சீரணிக்க கூடியவை. இவ்வாறு முன்னோர் ஆனந்தமும் ஆரோக்கியமும் கூடிய வகையில் இறைவனை வழிப்பட்டனர்.

உயிர் வாழ்க்கைக்கு தலைவர் விநாயகர் சுயநலம், சுயலாப நோக்கம் அவற்றை வைத்துக் கொண்டு வாழக் கூடாது என்று உணர்த்துபவர். சுயநலத்தை தியாகம் செய்ய வேண்டும். பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடாத்த வேண்டும். அதன் மூலம் தெய்வீகத்தை உணர வேண்டும். அதுவே நிஜமான விநாயக தத்துவம்.

## விநாயகப் பெருமானின் எழில் மிகு திருக்கோலங்கள்

1. பாலகணபதி
2. பக்திகணபதி
3. ஷக்திகணபதி
4. ஸித்திகணபதி
5. உச்சிஷ்டகணபதி
6. க்ஷிப்ர கணபதி
7. விஜய கணபதி
8. ஸ்ருஷ்டி கணபதி
9. ருணமோசு கணபதி
10. ருண்டி கணபதி
11. த்விமுக கணபதி
12. யோக கணபதி
13. ஏகதந்த கணபதி
14. ஹேரம்ப கணபதி
15. ஹரித்ரா கணபதி
16. தருண கணபதி
17. வீர கணபதி
18. த்விஜ கணபதி
19. ஊர்த்துவ கணபதி
20. லக்ஷ்மி கணபதி
21. மகா கணபதி
22. ஏகக்ஷர கணபதி
23. வர கணபதி
24. தக்ஷ்ர கணபதி
25. க்ஷிப்ரப்ராஸாத கணபதி
26. உத்தண்ட கணபதி
27. ஸிம்ஹ கணபதி
28. துர்கா கணபதி
29. ஸங்கடஹர கணபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்



தி. தர்மிதன்
தரம் - 4D

நான் தினமும், விநாயகரை வழிபடுவேன். அருகிலுள்ள ஆலயத்திற்குச் சென்று விநாயகரின் முன்னே நின்று மூன்று முறை தலையில் குட்டித் தோப்புக்கரணம் போட்டு வழிபடுவேன்.

பூக்கள், பூமாலை என்பவற்றை விநாயகருக்கு சாத்துவதற்குக் கொடுப்பேன். அறுகம்புல் விநாயகருக்கு விருப்பமானது. எனவே அதனைச் சேகரித்துக் கொடுப்பேன்.

விநாயகருக்கு விருப்பமான மோதகம், கொழுக்கட்டை, அவல், கடலை என்பவற்றைத் தினமும் படைத்து வழிபாடுகள் இடம் பெறுவதை காண எனது உள்ளம் மிகவும் ஆனந்தமடையும்.

விநாயகர் வழிபாட்டின் மூலம் நான் மன அமைதியும் நல்ல சிந்தனையும் உண்டாவதை உணர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயத்தவர் முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர்

செல்வன். சிவகாந்தன். ஹரிஷ்காந்
தரம் - 4A



சைவ சமயத்தவர் அனைவரும் முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர் ஆவார்.

விநாயகரை முதலில் வணங்கி எச் செயலைத் தொடங்கினாலும் அது சித்தமாகும் என்பதே அதற்குரிய காரணமாகும்.

விநாயகர் என்ற சொல்லின் பொருள் தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்பதாகும்.

ஓம் எனும் பிரணவ மந்திர வடிவினராக விளங்குபவரும் இவரே ஆவார்.

விநாயகப் பெருமான் அரசமரத்தடி, ஆற்றங்கரை, குளக்கரை போன்ற இடங்களில் விரும்பி உறைபவர்.

விநாயகப் பெருமானை மஞ்சள், சந்தனம், குங்குமம் போன்ற பொருட்களினால் பிடித்து அர்ச்சித்து வணங்குவார்கள்.

விநாயகப் பெருமானை வணங்கும் முறைகளாக சிதறு தேங்காய் உடைத்தல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் ஞானத்தின் திருவுருவம் அதனால் அவர் எம்மை எப்போதும் நல்வழியில் நடத்துவார். ஆகையால் நாம் நல்வழியிற் காரியத்தை முடிக்க முதலில் அவருடைய அருளை நாடுகினறோம்.

விநாயகரைப் பூக்களாலும், பொருட்களாலும் அர்ச்சிக்கலாம். அவற்றுள் முக்கியமானது அறுகம்புல் ஆகும்.

விநாயகப் பெருமானை வணங்குவதன் பயன்களாக இடையூறு நீங்கும், வினைகள் வேரோடு அழியும், கல்வியறிவு பெருகும், விரும்பியது கிடைக்கும் எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய சிறப்புமிக்க ஞானத்தின் திருவுருவமான விநாயகப் பெருமானை வழிபட்டு வாழ்வில் சிறப்படைவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரும் தோப்புக்கரணமும்

**தேன்மொழி**
**ஆரம்பப்பிரிவு ஆசிரியை**

பிள்ளையார் வணக்கத்தில் பெருமை சேர்ப்பது குட்டிக்கும்பிடுதலும் தோப்புக்கரணமுமாகும். எமது வினைகளை வேரறுத்து வெற்றியையும் சித்தியையும் அளிப்பவர் விநாயகர். அவர் விரும்புவது நெற்றிக் கன்னப் பொட்டில் குட்டுதலும், தோப்புக்கரணமுமாகும். இவை இரண்டும் எமது உடலுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் அளிப்பனவாகும். இதை எமது முன்னோர்கள் தெட்டத்தெளிவாக அனுபவபூர்வமாக உணர்ந்து விநாயகர் வழிபாட்டு முறையில் சேர்த்துக் கொண்டனர். மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபடப்பக்குவப்படுத்துவதே குட்டிக்கும்பிடுதலும் தோப்புக்கரணமும் ஆகும்.

**"குட்டிக் கும்பிடுதல் எவ்வாறு?**

இரு கைவிரல்களையும் பொத்தி முட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டும். நெற்றியின் இரு பக்கமும் கண் இமை ஓரத்துக்கு மேல் (கை விரல் வைத்துப் பார்க்கும் போது நாடித்துடிப்பு இருக்குமிடத்தில் கை மாற்றாமல் இடது கையால் இடது கன்னப் பொட்டையும், வலது கையால் வலது கன்னப் பொட்டையும்) நடு விரல் மொழியால் குட்டுதல் வேண்டும். இம் முறையானது மூளைக்கு செல்லும் இரத்தோட்டத்தை துரிதப்படுத்தி மூளையை சுறுசுறுப்படையச் செய்கின்றது.

**தோப்புக்கரணம் போடுவது எப்படி?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கைப் பெருவிரல் இடது காது சோனையின் முன் பக்கமாகவும், ஆள்காட்டி விரல் பின்பக்க சோனையையும் அழுத்திப்பிடிக்க மிகுதி 3 விரலும் உள்ளங்கைப்பக்கம் பிடித்துக்கொள்ள வேண்டும்.இதே போல இடது கையால் வலது காதுச் சோணையையும் பிடித்து முள்ளந்தண்டு வளையாமல்பாதத்தின் குதி V வடிவத்தில் அமையத்தக்கவாறு குந்தி எழும்புதல் வேண்டும். இவ்வாறு தோப்புக்கரணம் போடும் போது முள்ளந்தண்டு, முழங்கால், வயிற்றுப்பகுதி, மூளைப்பகுதியின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தி மனதிற்கு அமைதியையும், சாந்தியையும் உருவாக்குகின்றது.

இம்முறை விநாயகர் வழிபாட்டின் போது தான் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் நாம் அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகள், பிழைகளுக்கு மன்னிப்பு கேட்பதாகவும் இவ்வழிபாட்டு முறை அமைகின்றது என்பதையும் எமது புராணக் கதைகள் கூறுகின்றன. எனவே நாமும் விநாயகர் சந்நிதியில் தலையில் குட்டி, தோப்புக்கரணம் இட்டு இறையருள் பெற்று உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம்புல்லின் சிறப்பு

து. அனந்தஜித்
தரம் - 4A



ஜனகமகாராஜன் மிதிலாபுரி என்ற நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு என்னை விட எந்த பரம்பொருளும் இல்லை என்ற அகந்தை உண்டு. அதனை பிள்ளையார் சீர்செய்ய விரும்பினார். அதனால் அவர் ஏழை அந்தணர் வடிவில் வந்தார். அவர் எனக்கு பசிக்கிறது என்று கேட்டார். அப்போது உணவை கொடுத்த போது ஓர் நொடியில் உண்டுவிட்டார். மீண்டும் பசிபசி என்று கத்தினார் அரசசபையில் இருந்த உணவு எல்லாம் நீங்கி விட்டது. உணவு இல்லாததால் வேறு இடம் நாடிச் செல்லக் கோரினான். உனக்கு அகந்தை கூடாது என்று கூறிவிட்டு திரிசுரனின் வீட்டிற்கு சென்றார். அப்போது எங்களிடம் அறுகம்புல் தான் உள்ளது என்று கூறிய பொழுது அதைத் தாருங்கள் என்று கேட்டு உண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ ஒழுக்கங்கள்

கி. டனுஷன்
தரம் - 4D

1. அதிகாலையில் எழுந்து காலைக்கடன் முடித்த பின் நீராடுதல்.
2. காலையும் மாலையும் திருநீறு அணிதல்.
3. உணவு உண்ண முன் இறைவனை வணங்குதல்.
4. தினமும் வீட்டில் காலையும், மாலையும் இறைவனை வணங்குதல்.
5. சைவ உணவுகளை உண்ணுதல்.
6. தினமும் அல்லது வெள்ளிக்கிழமைகளில் தவறாது ஆலயத்திற்குச் செல்லுதல்.
7. கோயிலில் அமைதி பேணுதல்.
8. பஞ்சபுராணங்களைப் பாடுதல்.
9. பிறருக்கு உதவி செய்தல்.
10. உண்மை பேசுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சின்னங்களுள்

# உருத்திராக்கம்

யுவராஜ் டிவேஜிகன் - 10B

விபூதியும், உருத்திராக்கமும் முக்கியமான சமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளினின்றும் எம்மைப் பாதுகாத்து, இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்களாகும். பிரதானமாக நீராடியவுடனும் , பூசை வழிபாடுகள செய்யும் நேரங்களிலும் இவற்றை நாள்தோறும் பக்தி சிந்தனையுடன் தரித்தல் வேண்டும்.

உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்ட போது , சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்திய மணியே உருத்திராக்கம் என்பர். எனவே, ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகின்றது. இதனை அணிதல் அவரது திருவருட்பேற்றுக்கு அறிகுறி. பத்தினிப் பெண்களுக்கு திருமாங்கல்யம் எங்ஙனம் புனிதமான ஆபரணமாக விளங்குகிறதோ, அங்ஙனமே சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் போற்றி அணிய வேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கிறது. உண்மையடியார்களைச் சைவ நெறியினின்றும் பிறழாமற் காக்கும் இரட்சையாகவும் விளங்குகிறது. ஒரு முகம் தொடக்கம் பதினாறு முகம் வரை கொண்ட மணிகள் உண்டு. ஒவ்வொரு வகை மணிக்கும் ஒவ்வொரு அதி தேவதை கூறப்படுகிறது. பொன்நிறம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருநிறம், கபில நிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஒரே இன மணிகளாலான மாலைகளே அணியத்தக்கன.

சந்தியா வந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராணபடனம், சிவாலய தரிசனம் போன்ற சாதனைகளை செய்யும் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியம். உறங்கும் போதும், மலசலங்கழிக்கும் போதும், ஆசௌச காலத்திலும் தரிக்கலாகாது. ஆசாரமற்றோரும் தரிக்கலாகாது. சிவ தீட்சை பெற்றவர்கள் இதை அணிய வேண்டும். சிகை, சிரம், காது, மார்பு, தோள், கை ஆகியவை உருத்திராக்கம் தரிக்கத்தக்க இடங்கள். எத்தனை முகங்கொண்ட மணிகளை எவ்வெவ் இடங்களில் அணியலாம் என்றும் , ஒவ்வொரு இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதாய் இருக்க வேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108/54 மணிகளைக் கொண்ட தாயிருக்கும்.ள செபமாலை மனத்தை இறைவனிடம் செலுத்தும் சிறந்த சாதனமாகும்.

பாவங்களைக் கண்டிப்பதனால் உருத்திராக்க மாலை 'கண்டிகை' எனப் பெயர் பெற்றது. 'உருத்திராக்க ஜாபாலம்" என்ற உபநிடதமும், ஏனைய உயர்ந்த சாத்திரங்களும் உருத்திராக்கத்தின் உயர்வை உரைக்கின்றன. நீராடும் போது உருத்திராக்கத்தின் மீது பட்ட நீர் நம் உடம்பில் படுவதால் மிகுந்த நன்மை உண்டாகும். உருத்திராக்கம் தலை, கழுத்து, மார்பு, கை முதலிய அங்கங்களில் தரித்துக் கொள்ள வேண்டும். உருத்திராக்க மணி தரியாமல் பூசை செய்வோர் பூசையின் பயனைப் பெறாது ஒழிவர்.

**"பூண்பதற்கு கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்**
**காண்பதற்குக் கூசுமரன் கைத்து"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வாழ்க்கை

யுவராஜ் டிவேஜிகன்
10 "B"

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும் போது நம் மனதிலே இன்பம் உண்டாகிறது. நாம் மாம்பழம் உண்ணும் போது அது கிடைக்குமாயின் இன்புறுகின்றோம். அன்றியும் நாம் விரும்பாத ஒன்று நம்மைச் சேரா விட்டாலும் நாம் இன்புறுகின்றோம்.களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான். இப்படியன்றி நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகிறது. எனக்காயினும், என்னோடு சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகிறது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகிறது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகிறது.

சைவ வாழ்க்கையில் துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீல நிறமான ஆகாயமும், கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அது போலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிட்டால் துன்பமில்லை. எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்து போம் என்று அஞ்சுவதில்லை. என் பயிரை அழிப்பவனைத் தடுத்ததும் கண்டித்ததுமேயன்றிக் கோபித்ததில்லை.

சைவ சமயத்தின் படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கின்றோம். இந்த வியாதியை தீர்க்கும் வைத்தியர் சிவ பெருமான். ஆதலால் அவருக்கு "வைத்திய நாதன்" என்று பெயர். நோயாளி தனக்கு பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான்.அது, போல் நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு. வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருள மாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்கு கிடையாவிடின், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமற் போனது பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்ப மாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான். ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கின்றான்.

பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான். அது போல,சிவபிரானாகிய வைத்திய நாதர் நாம் விரும்ப மாட்டாதவற்றை நமக்குச் சேர்த்ததும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மை சுகமாக வாழ வைத்ததற்கேயாம். ஆதலால் முயற்சிகளை கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காக கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போனதும் நன்மையே. அவைகள் நமக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறிய வேண்டியதில்லை. யாவும் அவருடைய செயலே, அவர் செய்வதெல்லாம் நன்மையே என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தால் அப்பர் சுவாமிகள் பாடியருளிய படி "நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்......" என்பதன் மூலமும் "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்......" என்பதன் மூலமும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம்.

துக்கம், கோபம், அச்சம் மூன்றும் உடலுக்கே தீமையானவை. எம்முடைய கப்பல் ஆழ்ந்து போனதால் பெரு முயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்ததும், எனக்கு யாராவது இடர் செய்ய வரும் போது கோபம் கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும், குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலன்றி நல்ல வைத்தியம் செய்ததும், அது இறந்து போனால் "பிறந்தவர் இறப்பது திண்ணம்" என்பதைக் கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத்தக்கவைகளாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவருடன் சேருவோம்

கி.கிரித்திஷ்
7B

தினமும் நாம் அன்பு, பொறுமை, நீதி, உண்மை, ஆணவம், அகம்பாவம், பொய் என்றெல்லாம் பல சிந்தனைகளைக் கேட்கின்றோம். இக்குணங்கள் எவ்வாறு எம்மிடம் வந்து சேருகின்றன என சிந்தித்ததுண்டா? இதனை விளக்க ஒரு சிறுகதை.

ஓர் ஊரிலே ஒரு பணக்காரன் இருந்தான். அவன் மற்றவர்களிடம் பொருட்களைத் திருடியே பணக்காரன் ஆனான். அவனுக்கு மனதில் ஒரு ஆசை இருந்தது. அந்த ஊரிலுள்ள ஆச்சிரமத்திலுள்ள குருவையும் சீடர்களையும் அழைத்து அவர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டும் என்பதாகும். தன் ஆசையை குருவிடம் கூற குருவும் விருந்துக்கு வருவதாக கூறினார். குறித்த தினத்தில் அறுசுவை உணவுடன் விருந்து பரிமாறப்பட்டது. குருவும் சீடர்களும் திருப்தியாக விருந்தை முடித்து ஆச்சிரமத்திற்குப் புறப்பட்டனர். ஆச்சிரமம் செல்லும் வழியில் சற்று நாட்களுக்கு முன்பதாக வந்து சேர்ந்த சீடனொருவன் தன் கைப்பையிலிருந்த வெள்ளிக்கரண்டியை எடுத்து இதை நான் விருந்திற்கு சென்ற வீட்டில் திருடிவிட்டேன் என்றான். குருவும் இதை அவர்களிடம் கொடுத்து மன்னிப்பு கேட்டுவிட்டு வா என்றார். மற்ற சீடர்கள் என்ன குரு அவன் திருட்டு அல்லவா செய்தான். எவ்வளவு பெரிய தவறு. சாதாரணமாக விட்டு விட்டீர்களே என்றார்கள். குருவே சிரித்த படி நாங்கள் உண்ட விருந்து திருடிச் சேர்த்த பணத்தில் போடப்பட்டது. அப்பழக்கம் எவ்வளவு விரைவாக அவனுள் பரவி விட்டது பார்த்தீர்களா? நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தால் மனக்கட்டுப்பாட்டுடன் இருந்ததால் திருட்டைப் புரியவில்லை. ஆனால் அவர் நம்மோடு சேர்ந்து சில நாட்களே ஆகின்றன. அதனால்தான் சுலபமாகத் திருடினான் என்றார்.

பார்த்தீர்களா? ஒரு வேளை உண்ட விருந்திலிருந்தே நம்மோடு பழகியவரின் குணம் தொற்றும் போது காலம் காலமாகப் பழகும் தீயவர்களின் பழக்கம் எவ்வளவு விரைவாகப் பரவும். இதேபோலத்தான் நாங்கள் நல்லவருடன் சேர்ந்தால் நல்ல பழக்கங்கள் எம்மகத்தே வந்து சேரும். நாம் நல்லவராக இருப்பது மட்டுமல்லாது எம்முடன் சேருபவர்களையும் நல்லவர்களாக மாற்ற வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

ஞா. ஜதுஷிகன்
தரம் - 4D

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபடும் சமயம் சைவசமயம் எனப்படும். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவசமயிகள் எனப்படுவர். சைவ சமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. இறைவன் எழுந்தருளி அருள் புரியும் இடம் கோயில் எனப்படும்.

இத்தகைய கோயில்களுக்கு நாள் தோறுஞ் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள் தோறுஞ் செல்ல முடியாதவர்கள் வெள்ளிக் கிழமைகளிலாவது வேறு விரத நாட்களிலாவது தவறாது சென்று தரிசனஞ் செய்தல் வேண்டும். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பூரணை, அமாவாசை, திருவாதிரை, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, கந்தசஷ்டி என்பன சிவாலய தரிசனத்திற்குரிய சிறப்பான புண்ணிய காலங்களாகும்.

ஆலயத்தில் முதலில் விநாயகரை வழிபடவேண்டும். வழிபாட்டின் இறுதியில் சண்டேசுவரை வழிபட வேண்டும்.

ஆலயங்களில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்வர்.

கோயிலில் நாம் சரியைத் தொண்டுகள் செய்ய வேண்டும், கோயிலைக் கூட்டுதல், மணி அடித்தல், பூக்களைப் பறித்துக் கொடுத்தல், ஆலயச் சூழலிலுள்ள தேவையற்ற பொருட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றுதல் போன்ற தொண்டுகளைச் செய்வதன் மூலம் இறையருளைப் பெற முடியும்.

நாம் சிறுவயதிலிருந்து ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதால் இறைநம்பிக்கையின் மூலமாக நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க முடிகின்றது. எனவே நாம் தவறாமல் ஆலய வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குப் பிடித்த அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் சிந்தனைத் துளிகள் சில...

சி. சதுர்ஷன்
தரம் - 4D

- வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க சுலபமானதும், மேலானதுமான மார்க்கம் ஆண்டவனின் நாமத்தை மௌனமாக ஜெபிப்பது.

- மன ஒருமைப் பாட்டுடன் இரண்டு நிமிட நேரம் கடவுளைப் பிரார்த்திப்பதும், தியானிப்பது மன ஒருமைப் பாடில்லாமல் பல மணி நேரம் செய்வதை விடச் சிறந்தது.

- காலை, மாலை, சந்தியா காலமே கடவுளை வழிபட ஏற்றது. அப்போது மனம் அமைதியாக இருக்கும்.

- எந்த மனிதனும் எப்போதும் துன்பத்திலேயே இருக்க முடியாது. யாரும் ஆயுள் முழுவதும் துயரத்துக்கு ஆளாவதில்லை. ஒவ்வொரு சொல்லும் அதனதன் பலனைத் தருகின்றது. அதற்கேற்ப வாய்ப்புகளையும் கொண்டு வருகின்றது.

- இறைவனுடைய படம் அவரது நிழல்லவா? நீ அதன் முன் பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தால் அவர் அந்தப் படத்தின் மூலமாக உனக்கு காட்சியளிப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன் கடமைகளைச் செய்தேயாக வேண்டும். ஆனால் பிரார்த்தனையும் ஜபதியானமும் மிகவும் அவசியம். காலையும் மாலையும் இதைச் செய்ய வேண்டும்.

- எப்போதும் சுறுசுறுப்பாக ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும். வேலையின்றி ஒருவர் ஒரு போதும் இருக்கக் கூடாது.

- உனக்கு அமைதி வேண்டுமானால் பிறர் குற்றங்களைப் பார்க்காதே அதற்குப் பதிலாக உலகம் முழுவதையும் உனது சொந்தமாகக் கற்றுக் கொள்.

- நான் எனும் எண்ணம் இருக்கும் வரை ஆசைகளும் இருந்தே தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனும் அவனது அருட்கொடையும்

**ஆக்கம். திரு. சிவஞானம் கவியரசன்**
**ஆசிரியர்**

கடவுள் என்கின்ற பேராற்றலை முதலில் நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்தப் பேராற்றலின் மீது முழுமையான நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த இரண்டும் ஒரு மனிதனிடம் இருந்துவிட்டால் எந்த ஒரு மனிதனும் தன் வாழ்நாள் முழுவதும் வீழ்ச்சியடையவே முடியாது.

இதில் அவர் மீது முழுமையான நம்பிக்கை வைக்கின்ற போது கடவுள் எம்மை எவ்வேளையிலும் காப்பார் என்ற நம்பிக்கை மற்றும் மன உறுதி ஏற்படும். இந்த நம்பிக்கையே நாம் எதைச் செய்தாலும் உள்ளத்தில் உறுதியையும், தாழ்வு மனப்பான்மை வராமலும் பாதுகாக்கும். இதற்கு உதாரண சம்பவமாக பிரகலாதன் என்ற சிறுவன் கிருஷ்ணரை வழிபடுகின்றான். ஆனால் இரணியனுக்கு இது பிடிக்கவில்லை. அவனை வழிபட சொல்கின்றான். இறுதியில் இரணியன் பிரகலாதனிடம் உன் கடவுள் எங்கு உள்ளான் என கேட்க "தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்" எனக் கூறுகின்றார். எனவே இந்த தூணில் இருப்பானா என பிரகலாதனைக் கேட்க அவன் தூணை உடைத்த போது கிருஷ்ணர் நர சிம்மர் வடிவுடன் காட்சியளித்தார். இதுவே கடவுள் மீது அவன் கொண்ட நம்பிக்கை. அவனுக்கு முன் காட்சியளித்து அவனது துன்பத்தை போக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு உற்சாகத்துடன் செயற்படும் போது நம்பிக்கை பிறக்கும் இதுவே எம் வாழ்வில் வெற்றிக்கான தேவை திறக்க வைக்கும். சூழ்நிலையை திருத்தும் முயற்சியில் ஈடுபடாமல் நம்மைத் திருத்திக் கொள்ள முதலில் ஈடுபட முடியும். மற்றவர் மீது பழி போடாமல் நம்மைப் பற்றி ஆராய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும். இதுதான் கடவுள் மீது உண்மையான உணர்வை ஏற்படுத்தும்.

தன்னுணர்வு மிகுந்தவுடன் பரிணாம வளர்ச்சியைப் பெற முடியும். இது இதய பலம் பெற்றதிற்கு வாய்ப்பாக அமையும் இதயத்தினுடைய பலம் யானையின்ஆற்றலுக்கு இணையானது. இதன் காரணமாக எந்தக் காரியத்தையும் கண்டு மலைத்து நிற்க வேண்டிய அவசியம் இல்லை. கஷ்டத்தை பெரிதுபடுத்த வேண்டியதில்லை.

நம்மை நாமே கைவிடாமல் நம்பிக்கையுடன் இறை நாமத்தை உச்சரித்து அவனை போற்றுகின்ற போது இறைவன் எம்மை ஒரு போதும் கைவிட மாட்டான். எனவே வாழ்க்கைக்கு உறுதியே முக்கியம் அதற்கு கடவுள் நம்பிக்கையே உரமேற்றி திண்மைப்படுத்துகின்றது. எனவே "அவன் இன்றி அணுவும் அசையாது" எனவே இதன் விளக்கம் உலகில் இடம்பெறும் எல்லா செயல்களுக்கும் இறைவனே பொறுப்பாக இருக்கிறான். அதனால் நாம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் எமது கடமையை இதயச் சுத்தியுடன் சரிவர செய்வதன் மூலமாக எமக்கு நல் வாழ்வையே இறைவன் அள்ளித் தருவான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே எமது இந்து சமயத்தில் தோன்றிய முனிவர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் மகரிஷிகள் போன்றவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகளை எடுத்து நோக்கும் போது அவர்கள் இறைவன் மீது வைத்த நம்பிக்கையே அவர்கள் நினைத்த கணப்பொழுதில் அற்புதங்களையும் பேராற்றல்களையும் உலகமே வியந்து பார்க்கும் படியும் விஞ்ஞானம் திரும்பிபார்க்கும் படியும் செய்ய வைத்தது என்ற உண்மையை எவராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாத நிதர்சன உண்மையாகும். எனவே இறைவனை நம்பி அவனது திருவடிகளில் எமது அனைத்து செயற்பாடுகளையும் ஒப்படைத்து இறைநம்பிக்கையுடன் வாழ்கின்ற போது இந்த உலகமே எமக்கு சார்பானதாக மாறி உதவி புரியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

**"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றின் மகிமை



சம்பந்தப் பெருமானின் வாழ்க்கையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம். ஆணவம் கொண்டவர்கள் அழிந்தனர் சமயமே அற்றுப் போனது. "ஆலவாயவன் துணை" கொண்டவர் வெற்றி பெற்றார். அவரது புகழும் பெருமையும் இன்றும் பேசப்படுகின்றது. அதாவது பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் திருஞான சம்பந்தர் அரசசபைக்கு செல்கின்றார். அரச சபையில் சமணப்பெரியவர்கள் பலர் இருந்தனர்.அவர்கள் மன்னனின் வெப்பு நோயை தாங்கள் மாற்றுவோம் என ஆணவத்தோடும் பொறாமையோடும் உரத்த குரலில் கூறினர். மன்னன் சம்பந்தப் பெருமானைப் பார்த்த போது ஆலவாய் அப்பன் துணை நிற்பான் என பணிவோடும் இறை நம்பிக்கையோடும் கூறினார்.

சமணர்கள் தமக்குத் தெரிந்த மந்திர தந்திரங்களை உபயோகித்து வெப்பு நோயை மாற்ற முயன்றனர். மன்னனுக்கு வெப்பு நோயின் தாக்கம் அதிகரித்ததோடு சமணர்கள் மீது வெறுப்பும் அதிகரித்தது.மன்னன் சம்பந்தப் பெருமானை வேதனையோடு பார்த்தார். சம்பந்தப் பெருமான் தனது பிஞ்சுக்கரத்தில் திருநீற்றுப பையை எடுத்து திரு ஆலவாய் இறைவனை மனதாரப் பணிந்து "மந்திரமாவது நீறு" திருப்பதிகத்தைப் பாடி அன்போடு மன்னனின் அடி வயிற்றுப்பகுதியில் பூசவும் அந்த இடம் குளிர்மை பெற்றது. நோய் அகன்றது.பின் வலது பக்கத்திலும் பூசி வெப்பு நோயை மாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தர்

செல்வன் .பி. ஹரீஷன்
தரம் - 3A



கி.பி.632இல் தஞ்சை மாவட்டம் சீர்காழியில், சிவபாதவிருதயர், பகவதியார் தம்பதியருக்கு மகனாக திருஞானசம்பந்தர் பிறந்தார். இவர் உமையம்மாளிடம் ஞானப்பாலுண்டு, தமது 3வது வயதிலே "தோடுடைய செவியன்" எனும் தேவாரத்தினை சீர்காழி பரமனும், பார்வதிதேவியும் மகிழப் பாடினார். பின் பல திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை இசையுடன் பாடி வழிபட்டார்.

தமிழகமெங்கும் செந்தமிழோசை முழங்கச்செய்து, சைவத்தோடு தமிழ் வளமும் பொங்கச் செய்தவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். இவர் பாடிய பாக்கள் பிற்காலத்தில் பன்னிரு திருமுறைகளில் 1,2,3 ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் அவர்கள் 16000 பதிகங்கள் பாடினார் என்பர். ஆனால் 384 பதிகங்கள் அடங்கிய 4181 பாடல்களே இன்று நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை 24 பண்களில் பாடியுள்ளார்.இவை இனிய ஓசையுடன் கூடிய இசைப்பாக்கள் எனத்தகும் விருத்தப்பாக்களாக கிடைக்கப்பெற்றன. சம்பந்தருக்கு திருக்கோலக்காவில் இறைவனால் பொற்றாளம் கிடைக்கப்பெற்றது. இதிலிருந்து சம்பந்தமூர்த்தி நாயனரின் அவர்களின் தேவாரப் பதிகங்கள் பண்ணுடனும், தாளத்துடனும் பாடப்பட்டது என்று கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அருளால் சம்பந்தர் பல அற்புதங்களையும் செய்தார். சோழ நாட்டில் சைவத்தை உறுதிபெறச் செய்து, மங்கையற்கரசியின் வேண்டுகோளுக்கிணங்கி சமணசமயத்தை சேர்ந்திருந்த பாண்டியநாட்டை சமணர்கள் பிடியிலிருந்து மீட்ட பெருமை திருஞானசம்பந்தரையே சாரும்.பாண்டிய மன்னின் வெப்பு நோயை நீக்க உடலெங்கும் திருநீற்றைப் பூசி "மந்திரமாவது நீறு" என்னும் பதிகத்தைப் பாடினார். மன்னின் நோய் குணமாகியது.அதன் பின் மன்னர் சைவ சமயத்தை பல கோயில்களை கட்டி சைவசம யத்தை வளர்த்தார்.

சம்பந்தர் அவர்கள் இராமேஸ்வரத்தில் நின்றும் இலங்கையின் கிழக்குக் கரையில் உள்ள திருக்கோணமலை திருக்கோணேஸ்வர தலத்தின் மீது "நிரைகழ லரவஞ் சிலம்பொலியலம்பு" என்னும் கோணேசப் பதிகத்தினை பாடியுள்ளார்.மேலும் "காதலாகிக் கசிந்து" , "சிறையாரும் மடக்கிளியே", "என்ன புண்ணியம் செய்தனை", "புலனைந்தும் பொறிகலங்கி", "உற்றுமை சேர்வது", "அங்கமும் வேதமும் ஓது நாவர்" போன்ற பல ஏராளமான பதிகங்களை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியுள்ளார். சம்பந்தமூர்த்தி நாயனார் கி.பி.648இல் தமது 16வது வயதில் இறைவனுடன் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி"

அ. ஆகாஷ்
தரம் 10E

"தானங்களிற் சிறந்தது அன்னதானம்" எனத் தலைசிறந்த வாழ்க்கை நெறிகளை வகுத்து வாழ்ந்து காட்டியவர்கள் எம் முன்னோர்கள். நல்ல வழியிற் தேடிய பொருட்களைப் பகுத்து தானும் உண்டு ஏனைய உயிர்களிற்கும் கொடுத்தல் அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாகும்.

பசிப்பிணியே உடலிற்கு வரும் நோய்களுள் மிகக் கொடியது. அதுவே ஏனைய நோய்களிற்கும் காரணம். இதனாலேயே ஔவைப் பிராட்டி

**"கொடிது கொடிது வறுமை கொடிது"**

என்றார். பசிப்பிணியை போக்க வல்லவர்களே உண்மையான வள்ளல்கள், உடலை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாதது. அதனாலேயே "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என திருமந்திரம் கூறுகின்றது.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து தரப்பினரையும் பாதுகாத்து அவர்களிற்கு உணவளித்தல் இல்வாழ்வானின் கடமை என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். பசித்தவர்களுக்கு உணவளித்த பின், மிஞ்சிய உணவை தாம் உண்டு வாழ்பவர்களைத் துன்பம், துயர், இடையூறுகள் அணுக அஞ்சுகின்றன. இவர்கள் வாழ்வில் எந்நாளும் இன்பம் பொங்கும். இவர்கள் துன்பத்தில் வருந்துவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமரபு, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பினைக் கட்டி வளர்த்து வந்திருக்கின்றது. கோயில்களுக்கு அணித்தாகத் திருமடங்கள், சத்திரங்கள் அமைத்தல், உற்சவங்களின் போதும் முடிவிலும் மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானம் வழங்கல், வீடுகளில் நடைபெறுகின்ற சமய, சமூக வைபவங்களின் போது உணவளித்தல் என்பன சைவசமய கருமங்கள் ஆகும். இப்பண்புகள் பேணி வளர்த்துத் தொடரப்பட வேண்டியவை.

சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசிப்பிணியைப் போக்க கஞ்சித் தொட்டிகளை ஊர்தோறும் அமைத்து தொண்டு புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பிடியரிசி வழங்கும் புண்ணிய காரியத்தை தொடங்கிய பெருமையும் இவரையே சாரும். இதன்படி தினமும் உலையில் போடப்படும் அரிசியில் ஒரு பிடியை எடுத்துச் சேமித்து பின் ஒரு மாத காலத்தால் அவ் அரிசி ஏழைகளின் பசியைப் போக்க வழங்கப்படும். இம் மாதிரியான பசித்தோடுக்கு உணவளிக்கும் உயரிய பண்பு பண்டைக்காலம் முதல் நாவலர் காலம் வரை சைவமக்களிடையே சைவப் பாரம்பரியமாக வளர்ந்துள்ளது. இத்தகைய பசித்துயர் துடைக்கும் பண்பாட்டினை சைவமக்களாகிய நாம் நன்குணர்ந்து நவராத்திரி போன்ற விசேட தினங்களிலாவது கடைப்பிடிக்க உறுதி பூண வேண்டும்.

நன்றி

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாந் தலை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாடு

கோணேஸ்வரன். யுக்கேஷன்
தரம் 9A

இந்து மதத்தை பொறுத்தவரை பன்னிரெண்டு மாதங்களுமே விழாக்களும் விரதங்களும் பண்டிகைகளும், சதுர்த்தி, பிரதமை, வளர்பிறை, தேய்பிறை, அட்டமி, நவமி என முக்கியத்துவம் வாய்ந்த மாதங்களாக விளங்குகின்றன.

அந்த வகையில் நாம் விரதங்களை எடுத்து நோக்கும் போது சக்திக்குரிய விரதங்களுள் நவராத்திரி விரதமும் முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இது பிரதமை முதல் நவமி ஈறாகவுள்ள ஒன்பது தினங்களாகும். 'நவ' என்பது ஒன்பது, 'ராத்திரி' என்பது இரவுகள் ஆகும். இந்த ஒன்பது இரவுகளும் வீரம், செல்வம், கல்வி இந்த மூன்றையும், பெற்றிட முப்பெரும் தேவிகளையும் மும்மூன்று நாட்கள் கிரியாசக்தியான வீரம் தரும் அன்னை துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களும் இச்சாசக்தியான செல்வம் தரும் அன்னை இலக்குமியையும், இறுதி மூன்று நாட்களும் ஞானசக்தியான கல்வி தரும் அன்னை சரஸ்வதியையும் வழிபடுதல் வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நவராத்திரியானது நான்கு வகையாக காணப்படுகின்றது. அவையாவன, மகா நவராத்திரி, வசந்த நவராத்திரி, ஆஷாடநவராத்திரி, சாரதா நவராத்திரி இவற்றுள் புரட்டாதி மாத அமாவாசைக்குப் பின் வரும் சாரதா நவராத்திரியே சிறப்பு வாய்ந்ததும் மகிமையுடையதாகவும் மக்களால் கொண்டாடப்படுவதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நவராத்திரி தினங்களில் கொலுவைத்தல், கும்பம் வைத்தல், அலங்கரித்தல், பூசை பக்திப்பாடல்கள் என முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பஞ்சபூதங்களில் ஒன்றான மண்ணினால் சிலை செய்து அதில் அம்மனை எழுந்தருள செய்து வழிபட்டால் அன்னையின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என தேவி புராணம் கூறுகிறது. அதே போன்று மார்க்கண்டேய புராணத்தில் 'மகாராஜசுரதர்' என்பவன் தன் குருவின் ஆலோசனைப்படி காளி ரூபத்தை மண்ணினால் செய்து வழிபட்டு அருள் பெற்றதாக கூறப்படுகின்றது. இதை உணர்த்தும் விதமாக கொலு காட்சியில் வைக்கப்படுகின்றது. கொலுவைப்பவர்கள் புரட்டாதியில் வரும் அமாவாசை நாளில் கொலுவைக்கும் முன்பு வீட்டைச்சுத்தமாக்கி அழகிய கோலங்கள் இட்டு மேடை அமைத்து பொம்மைகளை வரிசைப்படுத்த வேண்டும். ஐந்து, ஏழு, ஒன்பது படிகள் வைத்து கொலு வைப்பதே சிறந்ததாகும். முதலாம் படியில் புல், செடி, கொடி ஆகிய தாவரப் பொம்மைகளையும், மூன்றாம் படியில் எறும்பு, கறையான், புற்று பொம்மைகளையும் நான்காம் படியில் நண்டு, வண்டு பொம்மைகளையும், ஐந்தாம் படியில் மிருகங்கள், பறவைகள் போன்ற பொம்மைகளையும், ஆறாம் படியில் மனிதப் பொம்மைகளையும், ஏழாம் படியில் முனிவர்கள், மகான்கள் பொம்மைகளையம், ஒன்பதாம் படியில் பிரம்ம, விஷ்ணு, சிவன் ஆகியோர் தம் முப்பெரும் தேவிகளான சரஸ்வதி, இலக்குமி, பார்வதி தேவியுடன் அமரும் பொம்மைகளும் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

மனிதவாழ்வுக்கு இன்றியமையாத இத் தெய்வங்களை வேண்டி வீடுகள், பாடசாலைகள், திணைக்களங்கள், கல்வி பயிலும் நிலையங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை நாம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர்

அ.நிதேஷனன்
7"B"

மேலைத்தேசத்தில் கீழைத்தேச வாழ்க்கை முறையையும் சமய நம்பிக்கையும் ஓர் காலத்தில் எள்ளி நகையாடினர். மந்திரவாதிகள் எனவும் காட்டுமிராண்டிகள் என்று இம்மக்களை கேவலமாக பேசினார். அவர்களுடைய நாட்டிற்கே சென்று கீழைத்தேசங்களின் உயரிய பண்பாட்டினையும் இந்து சமயத்தின் உயர்ந்த தத்துவங்களையும் பற்றி உரை நிகழ்த்தினார் சுவாமி விவேகானந்தர்.

இவரது பேச்சாற்றலும் விளக்கமும் மேலை நாட்டவரைக் கீழைத் தேச சமய கலாசார பண்பாட்டின் பெருமையை உணரச் செய்தன. இந்தியாவில் கல்கத்தா நகரில் 1863 ஆம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி பிறந்த இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் "நரேந்திரன்" தந்தை விசுவநாத தத்தர் ஒரு வழக்கறிஞர், தாயார் புவனேஸ்வரி அம்மையார்.

குழந்தையாக இருந்த போது தாயாரிடம் மகாபாரதம் இராமாயணம் போன்ற புராணங்களை கற்றார். இளமையிலேயே ஒரு சிறு பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். சுவாமி இராமகிருஷ்ணரின் தொடர்பால் இவரது ஆன்மீகப் பணி உயர்வடைந்தது. வெவ்வேறு வழிகளில் பாயும் ஆறுகள் இறுதியில் கடலை அடைவது போன்று எல்லாச் சமயங்களும் முடிவில் இறைவனை அடைகின்றன.......என்று சுவாமி விவேகானந்தர் நம்பினார், அதையே உலகுக்கு எடுத்துரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1893 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 11ம் நாள் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெறும் சர்வ சமய பெரு மன்றத்தில் சுவாமி விவேகானந்தர் நிகழ்த்திய உரையினால் பலர் ஈர்க்கப்பட்டனர். பல மேல்நாட்டினர் இவரது கொள்கையை பாராட்டினர் உலகெங்கும் பலர் இவருடைய சீடரானார்கள், 1897 ஆம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி சுவாமி இலங்கை மண்ணில் கால் வைத்தார். 1902 ஆம் ஆண்டு ஆடி மாதம் புரட்டாதி 12ம் திகதி கொழும்பில் விவேகானந்த சபை உருவாகிறது. தொடர்ந்து பல நகரங்களில் விவேகானந்த சபைகள் உருவாகின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய விழாவாகப் போற்றப்படும் நவராத்திரி

திருமதி . Y . மகாதேவன்
நூலகர் பொறுப்பாளர்

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது. சக்தியை நாயகியாகக் கொண்டு நடைபெறுவது நவராத்திரி விழா. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி எனும் முப்பெருந் தேவியர்களை நோக்கிப் பூசை, வழிபாடு, விரதம் அனுஷ்டித்தல் , விழாவெடுத்தல் என்பன நவராத்திரி காலங்களில் நிகழ்த்தப்படுகின்றன. சகல உலகங்களையும் படைத்து, அவற்றையெல்லாம் இயக்கிக் காத்து வருகின்ற மாபெரும் சக்தியை, மகாசக்தி என்றும், ஆதிபராசக்தி என்றும் நம் முன்னோர்கள் கொண்டு அச் சக்தியை பயபக்தியோடு வழிப்பட்டு வரலாயினர். இது இந்துப் பண்பாடாக வளர்ந்து இன்றும் இந்து மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. சக்தி தத்துவத்தைச் சாக்தம் என்று அழைக்கின்றனர். இந்துசமயம் கொண்டுள்ள ஆறு உட்பிரிவுகளாகவே அவற்றை ஆசிசங்கரர் குறிப்பிடுகிறார். சாக்தம் ஒரு காலத்தில் பாரத தேசம் முழுவதிலும் தனித்துத் தனிநெறியாக விளங்கியது. அதன் சுவடுகள் சிற் சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன.

ஆயினும் பின்னர், மற்றைய நெறிகளுடன் கலந்து, சமய வேறுபாடின்றி சக்தியையும் வழிபாடு செய்யும் முறை ஏற்பட்டு விட்டது. சிவனின் தேவியாகவும், விஷ்ணுவின் சகோதரியாகவும்; விநாயகன் , முருகன் ஆகியோரின் தாயாகவும் பராசக்தி விளங்கும் போது, வைதீக சமயங்களுக்கிடையே பேதம் இருக்க வேண்டிய அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமற் போய்விட்டது. தற்காலத்தில் புற சமயங்களும் கலந்து கொள்ளுமளவிற்கு நவராத்திரி தேசிய விழாவாகி வருகிறது. கோயில்கள், வீடுகள், பொதுமன்றங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் , வேலைத்தளங்கள் , கலை நிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் பல்லின, பலமொழி, பல்சமய மக்களிடையே ஐக்கியத்தையும், தேசிய ஒருமைப்பாட்டினையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக் கூடிய சிறந்த ஊடகமாக, நம் நாட்டில் நவராத்திரி விழா அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

**பிராத்தனையில் எளிமை இருக்கலாம்; ஆனால் அதன் நோக்கத்தில் உயர்வு வேண்டும்.**

**பிரார்த்தனை கவலையை தெரிவிப்பதற்கு அல்ல. அதனைப் போக்குவதற்காகவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம்

ரியேந்திரன் ஷஷ்டிகன்
9E (2017)

இலங்கையிலேயே புகழ் பூத்த முருகனாலயங்களில் இதுவும் ஒன்றாகும். இது மாதுமை சமேதராக அருளாட்சி புரியும் கோணைநாதர் உள்ள சிவ பூமியிலேயே இவ்வாலயம் காணப்படுகிறது. இலங்கையிலேயே இந்த ஆலயத்தில் மட்டும் தான் மகோற்சவத்திற்காக கருவறையில் உள்ள மூலமூர்த்தி உள்வீதி, வெளி வீதி உலாவிற்காக எழுந்தருளுவது சிறப்பியல்பாகும். இவ் ஆலயத்திற்கு ஒரு வரலாற்றுக் கதையுமுண்டு.

இந்தியாவில் உள்ள சிற்பி ஒருவர் பஞ்சலோகத்தில் இவ் வள்ளி, தெய்வயானை சமேத முருகனை செதுக்கி வழிபட எண்ணினார். எனினும் இதனைப் பிற்காலத்தில் பேண முடியாமல் போகவே சிற்பியின் கனவில் தோன்றிய ஷண்முகப் பெருமான் "என்னை நீ வர்த்தகக் கப்பல் ஒன்றில் வைத்து விடு" என்று கூறி மறைந்தார். அதற்கேற்ப அவரும் அவ்வாறே செய்தார். அவ் வர்த்தகக் கப்பல் திருக்கோணமலை கடலை அடைந்த பின் அசையாமல் அவ்வாறே நின்றது. அவ்வாறே கப்பலில் ஏதேனும் பிழை உண்டா என்பதை சோதித்த மாலுமி அவ்வாறே தூங்கி விட்டார். அவர் கனவில் தோன்றிய முருகப் பெருமான் "உங்கள் கப்பலின் உள்ளே உள்ள அந்தப் பெட்டியை கடலில இட்டால் கப்பல் நகரும்" என்று கூறி மறைந்தார். அவரும் அவ்வாறு செய்யவே கப்பல் நகர்ந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சிறிது காலத்தின் பின் மனையாவெளி மீனவர்கள் கரை வலை வீசிய பொழுது அதில் ஏதோ பெட்டி வருவது தெரிந்தது. அதனை எடுத்த மீனவர்கள் பெட்டியை திறந்த பொழுது தங்க ஆபரணங்களுடன் வள்ளி, தெய்வயானை சமேதராக பஞ்சலோகத்தில் காணப்பட்டனர். முருகனின் அருளை மெச்சிய மீனவர்கள் முருகனை அவ்விடத்தில் வைத்து பூஜை செய்ய ஆரம்பித்தனர். பின்பு சிவாச்சாரியார்களால் இம் முருகனுக்கு பூஜை புனஸ்காரம் இடம் பெற வேண்டும் என எண்ணிய மீனவர்கள் சிவாச்சாரியார்களுடன் இணைந்து தற்போது வில்லூன்றி கந்தசுவாமி உள்ள இடத்தில் முற்காலத்தில் கருவறையில் இருந்த கறுத்த பிள்ளையாரிடம் தம்பிக்கு இடம் கொடுக்குமாறு கோரி இப் பஞ்சலோக ஆறுமுக ஷண்முகனை மூல விக்கிரகமாக்கினார். அதன் பின் கொடிஸ்தம்பம், வசந்த மண்டபம் என்பன கட்டப்பட்டு பிள்ளையார், தண்டாயுதபாணி , வள்ளி தெய்வயானை சமேத முத்துக்குமாரர், அம்மன் போன்ற எழுந்தருளி விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு தற்போது மகோற்சவம் நடைபெறும் ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது.


மகோற்சவம் இடம்பெறும் போது காலை வேளையில் உள் வீதியுலா, முத்துக்குமாரரும், மாலை வேளைகளில் உள்வீதி, வெளிவீதி உலா இந்த கருவறை விக்கிரகமே வலம் வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு 15 நாட்கள் திருவிழா இடம்பெறும். அத் திருவிழா காலத்தில் தேர்ப்பவனியன்று கருவறை ஆறுமுகப் பெருமானே இரதத்தில் ஆரோகணிப்பார் ஆனால் தீர்த்தம் அன்று முத்துக்குமார சுவாமியே தீர்த்தத்திற்காக மூலமூர்த்தி விக்கிரகம் கரை வலையில் வந்து சேர்ந்த கடலுக்கு செல்வது வழக்கம். தீர்த்தத்திற்கு ஆறுமுகசுவாமி செல்லாமல் இருப்பதற்கும் ஒரு கதையுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வந்த இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றால் அவர் அவ்வாறே சென்று விடுவார் என்பதற்காக அவரை அழைத்துச் செல்வதில்லை.ஆனாலும் முத்துக்குமாரர் தீர்த்தம் முடிவுற்ற பின் அம்முருகனை முதல் வைத்து பூஜித்த இடத்திற்கு சென்று விடுவது வழக்கம். இவ்வளவு ஆலயச் சிறப்பு மிக்க இவ் வில்லூன்றி கந்தசுவாமி ஆலயம் தற்போது இலங்கையில் மிளிர்ந்து கொண்டிருப்பது அனைவரும் அறிந்தது. எனவே இச் ஷண்முகப் பெருமானை மனதார வணங்கி அருட்கடாட்சத்தை பெறுவோமாக.

**வில்லூன்றி பதியுறை ஆறுமுகவா போற்றி !**
**உன் பொற்பாதம் போற்றி !**
**போற்றி ! போற்றி !**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய திருவிழாக்கள்

க. ரிஷினிவாசன்
தரம் - 5A

1. இந்து சமயத்தில் தைப்பொங்கல், நவராத்திரி போன்றவை மிகவும் சிறப்பான நாட்களாகும்.

2. தைப்பொங்கலன்று சிறுவர்கள் பாட்டாசிட்டு விளையாடுவார்கள்.

3. தைப்பொங்கல் என்றால் மாரி நீங்கி கோடை பிறப்பதை இப் பண்டிகை உணர்த்துகிறது.

4. நவராத்திரியன்று முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவிக்கு உரியது.

5. மற்றைய மூன்று நாட்களும் சரஸ்வதிக்கு உரியது.

6. மற்றைய மூன்று நாட்கள் லட்சுமிக்கு உரியது.

7. சித்திரைப் புத்தாண்டு தமிழர்களுக்கு சித்திரை மாதம் பிறக்கும்.

8. அதிகாலையில் கிழக்கு நோக்கி நின்று மருத்துநீர் வைத்து நீராடுவோம்.

9. பின் கோயிலுக்கு சென்று சுவாமியை வணங்குவோம்.

10. பின் சகோதரர்களின் இல்லத்திற்குச் சென்று அங்கு தரும் இனிப்பு பண்டங்களை உண்டு மகிழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரதம் உணர்த்தும் குரு பக்தி

செல்வன் சுரேஸ் குமார் கிருத்திகன்
தரம் 3C



துரோணாச்சாரியார் பஞ்ச பாண்டவருக்கும் கௌரவருக்கும் உரிய பயிற்சிகளை வழங்கினார். பின்பு அப்பயிற்சிக்கான போட்டிகளை நடத்தும் போது அர்ச்சுனனும் அவனது எனைய வீரர்களும் கலந்து கொண்டனர். ஆனாலும் முதலில் அம்பு எய்யும் போட்டியிலும் அர்ச்சுனனே வெற்றி பெற்றான். அதே போன்று குடத்தில் நீர் நிரப்பும் போட்டியும் நடத்தப்பட்டது.

அப்போட்டியிலும் ஏனைய வீரர்கள் குருவையோ குரு கூறிய கருத்துக்களையோ சற்றும் நினைத்துப்பாராமல் தாம் என்ற எண்ணத்துடன் குடத்தில் நீர் நிரப்பினார்கள். ஆனால் யாராலும் குடத்தில் முழுமையாக நீரை நிரப்ப முடியவில்லை. ஆனால் அர்ச்சுனன் குடத்தில் நீரை நிரப்பும் போது தனது குருவை மனதால் நினைத்து வணங்கியது மட்டுமல்லாது அவர் கூறிய கருத்துக்களையும் நினைத்து குடத்தை நேராக வைத்து நீரை முழுமையாக நிரப்பி அப்போட்டியிலும் வெற்றி பெற்றார். குருவை நினைத்துப் பார்க்காது அவரின் கருத்துக்களையும் சிந்திக்காது நடந்த ஏனைய வீரர்கள் போட்டியில் தோற்றுப் போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நாமும் எமது குருவை வணங்கி அவரை மதித்து அவர்கள் கூறிய கருத்துக்களை கேட்டு நடந்து வந்தால் நாம் வாழ்க்கையில் வெற்றி பெறுவது நிச்சயம்.

"குருவை மதிப்போம் குலம் காப்போம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து கணிதவியல்

சாள்ஸ் ஹரிங்டன். அபிஷோத்மன்
10B

இந்துப்பண்பாட்டு மரபில் சமய நம்பிக்கைகளுடன் மெய்யியல், நுண்கலைகள், பொருளியல், சோதிடவியல், வானியல், மருத்துவம் என்பவற்றுடன் கணிதவியலின் வளர்ச்சியையும் காணலாம். இந்துக்களின் ஆன்மீக வாழ்க்கை சமூக வாழ்க்கை என்பவற்றுடன் கணிதவியலுக்கு மிக நெருக்கமான தொடர்புண்டு. எண்கணிதம், அட்சரகணிதம், திரிகோண கணிதம் என்பவற்றின் பயன்பாட்டையும், தொடர்பையும் காணலாம்.

வேதங்களிலும் அதன் வழிவந்த நூல்களிலும் கணிதவியல் தொடர்பான பல சன்றுகள் உள்ளன. வேதங்களில் எண்களை தசம முறைப்படி எழுதும் முறையைக் காணலாம். தைத்திரிய சங்கிதை, வாஜனேய சங்கிதை போன்றவற்றில் எண்களை $10^{19}$ வரை அறியப்பட்டுள்ளமையை புலப்படுத்துகின்றன. வேதங்களை அடுத்து வைதீக சூத்திர இலக்கியங்கள், தோன்றின. சூத்திர இலக்கியங்களின் ஒரு பிரிவாகிய சுல்வ சூத்திரம், பௌதாயன சூத்திரம் என்பவற்றில் கணிதவியல் பற்றிய பல விடயங்கள் காணப்படுகின்றன. சுல்வ எனும் வடமொழிச் சொல்லுக்கு அளத்தல் அல்லது கணித்தல் என்று பொருள் காண்பர். சுல்வ சூத்திரங்கள் கூறும் அளவைப் பிரமாணங்கள், கணிதவிதிமுறைகள் யாகவேதிகளை அமைக்கும் விதிகள் பற்றிய கருத்தை அடிப்படையாகக் கொண்டவை. யாக வேதிகைகளை வட்டம், சதுரம், அரைவட்டம், முக்கோணம், செவ்வகம், ஐங்கோணம் முதலான அமைப்புக்களில் நிருமாணித்தல் பற்றி பௌதாயன சூத்திரம் குறிப்பிடும். இதன் மூலம் யாகவேதிகளை நிர்மாணிப்பதில் கணித அறிவு பிரயோகிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமை புலனாகிறது. குப்தர் காலத்தில் தோன்றிய ஆரியப்பட்டரின் ஆரியப்பட்டீயம், வராகமிகிரரின் பஞ்சசித்தாந்திகா போன்றவற்றிலும் கணிதவியற் கருத்துக்கள் அதிகம் உண்டு. ஆரியப்பட்டீயம் வடமொழி நெடுங்கணக்கினை அடிப்படையாகக் கொண்டு எண்களை முறைப்படுத்தியுள்ளது. சைன் அட்டவணையை ஒத்த பெறுமானங்களையுடைய அட்டவணையை ஆரியப்பட்டீயம் கொண்டுள்ளது. வராகமிகிரரின் பஞ்சசித்தாந்திகா என்ற நூலில் கணித அட்டவணைகள் பலவற்றை காணலாம்.

பிரம்மஸ்பத சித்தாந்தம் என்ற நூலிக் 12ஆம் அத்தியாயம் "கணிதாத்யாய" எனவும், அதன் 18ஆம் அத்தியாயம் "குடகாத்யாய" எனவும் பெயர் பெறுகின்றது."கணிதாத்யாய" வில் எண்கணிதம் பற்றியும் "குடகாத்யாய" வில் அட்சர கணிதம் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. முதலாம் பாஸ்கரின் கர்ம நிபந்தம் என்ற நூலில் பல்வேறு வகையான கணித நுட்பங்கள் பற்றி உண்டு. கர்ம நிபந்தத்தில் அட்சர கணிதத்திலுள்ள முதல் நிலை முடிவுபெறாச் சமன்பாடுகள் தொடர்பாகக் கூறப்படும் தீர்வுகள் "குடக" எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

ஒரு வட்டத்திற்குச் சமமாக சதுரம் அமைதலைப் பற்றி நமது ரிஷிகள் குறிப்பிட்டுள்ளனர். ஆகியவற்றின் மதிப்பை அவர்கள் அறிந்திருந்தனர். ஜியோமிதி என்ற சமஸ்கிருச் சொல்தான் Geometry என்று ஆகியது. 'ஜ்யா' என்றால் பூமியென்றும் "மிதி" என்றால் அளவு என்றும் பொருட்படும். திரிகோண மிதி என்ற சமஸ்கிருதச் சொல் Trigonometry என்று ஆகியுள்ளது. ஒரு செங்கோண முக்கோணத்தின் மேலுள்ள சதுரத்தின் பரப்பு மற்ற இரண்டு பக்கங்களின் மீது வரையப்படும். சதுரங்களின் பரப்புகளின் கூட்டுத்தொகைக்குச் சமம் என்பது பைதகரசின் தேற்றம் ஆகும். ஆனால் கி.மு 500 ஆம் ஆண்டளவில் போதாயனர் தம் "கல்பசூத்திரம்" என்ற நூலில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 12 ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் தோன்றிய பாஸ்கராச்சாரியார் கணிதப் புலமையோடு கவிதைகள் படைத்தார். பாஸ்கராச்சாரியார் எண்கணிதத்தையும் (Arithmettic), கேத்திர கணிதத்தையும் (Geometry), லீலாவதி என்ற புத்தகத்திலும் இயல் கணிதத்தை "பீஜகணிதம்" என்ற நூலிலும் விளக்குகின்றார். பூஜ்யம் (Zero), எண்ணிலி (Infinity) என்பவற்றின் தத்துவங்களையும் தெளிவாக அவர் விளக்கியுள்ளார். Permutation and Combination என்று இப்போது அழைக்கப்படுகின்ற கணக்கு முறைமை "அங்க பாசவ்ய சவாரம்" என்ற பெயரில் பாஸ்கராச்சாரியார் ஏற்கனவே விளக்கியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மவியலும் அறிவியலும்

ஜெ. ஷகில்
8C

பெரியவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்,ஆன்மிகச் சான்றோர் போன்றோரின் கால்களில் நாம் வீழ்ந்து வணங்குவது ஏன்? வெறும் மரியாதை நிமித்தமா? இல்லை.

ஒவ்வொரு மானிடர் உடலிலும் ஒரு காந்தப்புலம் உண்டு. அவரவர் பெற்றிருக்கும் ஆன்மிக வலிமையின் அடிப்படையில் அது வேறுபடும்.

இது அருகிலுள்ள லோகங்களைப் பாதிக்கும் அளவு அவ்வளவு வலிமையானதல்ல என்று இன்றைய அறிவியல் மறுத்தாலும் அத்தகைய காந்தப்புலம் இருக்கின்றது என்பதை அது முற்றாக மறுதலிக்கவில்லை.

இக்காந்தப்புலத்தை புரிந்து கொள்வதற்கு தலையை வடமுனைவு எனவும் கால்களை தென்முனைவு எனவும் கொள்வோம். வடமுனைவிலிருந்து தென்முனைவிற்கு காந்த விசைக்கோடுகள் சென்று கொண்டிருக்கும்.

வடமுனைவுக்கருகே வடமுனைவைக் கொண்டு செல்லும் போது இவ்விசைக் கோடுகள் ஒன்றையொன்று தள்ளுகின்றன. ஆனால் வடமுனைவுக்கருகே தென்முனைவைக் கொண்டு செல்லும் போது அவை ஒன்றையொன்று ஈர்ப்பதால் அவை கவரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குதான் நாம் மெய்ஞ்ஞானத்தின் விஞ்ஞானத்தை நோக்க வேண்டும். பெரியவர்களின் காந்தப்புலம் அவர்களின் தலையிலிருந்து காலுக்கு சென்றுக்கொண்டிருக்கின்றது. ஆசீர்வாதம் வாங்கும் போது அவர்களின் கால்களில் நம் தலை படுகிறது தலை - கால் , இரண்டும் எதிரெதிர் முனைவுகள் ஒன்றையொன்று கவரும்.

இந்நிலையில் அச்சான்றோர் கொண்டிருக்கும் ஆன்மீக சக்தி, நேர் சிந்தனைகள் கால்களூடாக நம் தலையிற் பரவி நம் உடலை அடைகிறது. இதுவே காலில் விழுந்து ஆசி பெறுவதன் காரணம்.

மூத்தவர்களை தெரியாமல் மிதித்துவிட்டால் அவர்களைத் தொட்டு வணங்குதல் சிலரிடம் காணப்படும் பண்பாகும்.இங்கும் அதே அறிவியல்தான் பிரயோகிக்கப்படுகிறது. அவர்களின் கால்களை நம் கால்கள் மிதிக்கும் போது இரண்டும் ஒத்த முனைவுகள் ஒன்றையொன்று தள்ளும் . இதனால் பெரியவர்களின் எதிர்மறை எண்ணங்கள் நம்மை அடைந்துவிடக் கூடும் என்ற காரணத்தால் அவரைத் தொட்டு வணங்குகிறோம்.

இந்தக் காரணங்கள் மேலைத்தேய விஞ்ஞானத்தாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தக் காந்தப்புலங்களை மனித உடலைச் சுற்றியுள்ள ' ஆரா" (Aura ) என்றும் வண்ண ஒளிவட்டங்களாக காணும் ஆய்வுகள் மனித எண்ணங்கள் சிந்தனைகள் , உணர்ச்சிகள் 'ஆரா " வட்டத்தை பாதிக்கும் என நிரூபித்துள்ளன. ஒரு தனிமனிதனின் ஆராவட்டம் அவனது உடலியல் தொழிற்பாட்டின் வன்மையை பொறுத்து அருகிலுள்ளவர்களையும் பாதிக்கும் திறன் கொண்டது என நிற மருத்துவம் எனும் மருத்துவத்துறை குறிப்பிடுகிறது.

இப்போது புரிகிறதா... ஆன்மிகமும் அறிவியலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

## நவராத்திரி போட்டி முடிவுகள் – 2017

1. பாவனை நடிப்பு

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சிவருபன் ஜருவன் | 1 | 1 |
| 2 | செல்வன். ஹரிகாந்தன் ஸீருக்ஷான் | 1 | 2 |
| 3 | செல்வன். கொலின்ஸ்ரீட்மன் அக்ஷயன் | 1 | 3 |

2. மனனம் – ஆத்திசூடி

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். பிரதாபன் கவிஷன் | 1 | 1 |
| 2 | செல்வன். மோகிஷ் கிரிலோஷ் | 1 | 2 |
| 3 | செல்வன். கலைச்செல்வம் சரண் | 1 | 3 |

3. தேவாரம் புராணம் பண்ணோடு பாடல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். ரதீஸ்குமார் லோஹிஷாந் | 1 | 1 |
| 2 | செல்வன். உமாராஜன் மிதுர்ஷன் | 1 | 2 |
| 3 | செல்வன். யோகேந்திரன் வேதக்ஷயன் | 1 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

### நவராத்திரி போட்டி முடிவுகள் - 2017

1. மனனம் - திருக்குறள்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். குணநாதன் துவாரகன் | 2 | 1 |
| 2 | செல்வன். கேதீஸ்வரன் அட்ஷரன் | 2 | 2 |
| 3 | செல்வன். அஜந்தன் தர்ஷ்வின் | 2 | 3 |

2. தேவாரம் புராணம் பண்ணோடு பாடல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். புலேந்திரன் டிபேந்திரா | 2 | 1 |
| 2 | செல்வன். மதியழகன் குஹாத்ரிக்ஷ் | 2 | 2 |
| 3 | செல்வன். ஜயந்தன் பிரணித் | 2 | 3 |

3. எழுத்துப்பரீட்சை

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். திலீபன் ரகிசன் | 2 | 1 |
| 2 | செல்வன். பிரதீபன் சங்கீர்த் | 2 | 2 |
| 3 | செல்வன்.துரைராஜரெட்னம்சமாசுகேஷ் | 2 | 2 |
| 4 | செல்வன். குணநாதன் துவாரகன் | 2 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

## நவராத்திரி போட்டி முடிவுகள் – 2017

**1. மனனம்**

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சேகர் நிசாந் | 3 | 1 |
| 2 | செல்வன். சசிகாந்தன் டேணுவர்சன் | 3 | 2 |
| 3 | செல்வன். பிறேம்நாத் ஹரிசன் | 3 | 3 |

**2. மாலை கட்டுதல்**

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். திலகரெட்ணம் துஷாந் | 3 | 1 |
| 2 | செல்வன். ஸ்ரீதயாளன் ஸ்ரீசைலோஜன் | 3 | 2 |
| 3 | செல்வன். சுதாகரன் ரிஷிதரன் | 3 | 3 |

**3. கோலம் போடுதல்**

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சிவஞானம் ஆதர்ஷ் பரணி | 3 | 1 |
| 2 | செல்வன். அஜித்குமார் பிரஜன் | 3 | 2 |
| 3 | செல்வன். றோயல்ஜிப்சன்கொன்ஸரன் | 3 | 3 |
| 4 | செல்வன். ஜெயசீலன் தக்ஷரன் | 3 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எழுத்துப் பரீட்சை

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். பரணீதரன் இமாருகேஷன் | 3 | 1 |
| 2 | செல்வன். கிருஷாந்தன் ஷர்வின் | 3 | 1 |
| 3 | செல்வன். ராஜசேகர் திவ்யாஷ் | 3 | 3 |
| 4 | செல்வன். சுரேஸ்குமார் கிருத்திகன் | 3 | 3 |
| 5 | செல்வன். சுரேஸ் சதுர்ஜனன் | 3 | 3 |

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

## நவராத்திரி போட்டி முடிவுகள் – 2017

1. மனனம்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். ஸ்ரீநிவாசன் ஆதீஷ் | 4 | 1 |
| 2 | செல்வன். கிரிகரசர்மா கிஷாந் | 4 | 2 |
| 3 | செல்வன். அமலராஜ் தேகித் | 4 | 3 |
| 4 | சேல்வன். இலங்கேஸ்வரன் தர்விஸ் | 4 | 3 |

2. மாலை கட்டுதல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சுதர்சன் ஹிதுஜன் | 4 | 1 |
| 2 | செல்வன். தங்கேஸ்வரன் விதுஷ் | 4 | 2 |
| 3 | செல்வன். முருகானந்தன் பிரவீன் | 4 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. கோலம் போடுதல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சிவபாலன் சிறிசங்கர் | 4 | 1 |
| 2 | செல்வன். ஆம்ஸ்ரோங் சவினேஷ் | 4 | 2 |
| 3 | செல்வன். பிரசாந்த் தனுக்ஷன் | 4 | 3 |
| 4 | செல்வன். ஹரிகரன் டிசாதரன் | 4 | 3 |

### 4. எழுத்துப் பரீட்சை

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். சிவகரன் ஹிருத்திக்சன் | 4 | 1 |
| 2 | செல்வன். ஸ்ரீஸ்கந்தராஜா டிரோஷன் | 4 | 2 |
| 3 | செல்வன். திருக்குமார் கோபிஷன் | 4 | 3 |
| 4 | செல்வன். கோணேஸ்வரன் விபிலன் | 4 | 3 |

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

## நவராத்திரி போட்டி முடிவுகள் - 2017

### 1. மனனம்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். அ. அபிநயகிருஷ்ணன் | 5 | 1 |
| 2 | செல்வன். கரிகாலன் ரிஷி | 5 | 2 |
| 3 | செல்வன். துஷ்யந்தன் அனந்தஜித் | 5 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மாலை கட்டுதல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். கவிமகிந்தன் திஸ்திகன் | 5 | 1 |
| 2 | செல்வன். கலைச்செல்வம் அனுசாந் | 5 | 2 |
| 3 | செல்வன். குகதாஸ் தேவக்சீகன் | 5 | 3 |

## 3. கோலம் போடுதல்

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். ரஜீவன் சயுரன் | 5 | 1 |
| 2 | செல்வன். சதீஸ்வரன் சரண்ஜன் | 5 | 2 |
| 3 | செல்வன். குணசீலன் விஸ்ணுஹர் | 5 | 3 |
| 4 | செல்வன். சேகர் அபிஷேக் | 5 | 3 |

## 4. எழுத்துப் பரீட்சை

| இல | வெற்றியாளர் | தரம் | நிலை |
|---|---|---|---|
| 1 | செல்வன். கலைச்செல்வம் அனுசாந் | 5 | 1 |
| 2 | செல்வன். தவசீலன் கபிலாஷ் | 5 | 2 |
| 3 | செல்வன். ஜெயபாலன் விதுஷன் | 5 | 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## (தேசிய பாடசாலை)

## நவராத்திரி போட்டி முடிவுகள் - 2017

1. பண்ணிசைப் போட்டி

| தரம் | வெற்றியாளர் | நிலை |
|---|---|---|
| 06 | சேகர் லோஷன் | 01 |
| | உமேஷ் ஹம்சத்வன் | 02 |
| | வில்பர் சதீஸ்குமார் ஜாதவ் | 03 |
| | யோகேஸ்வரன் சஞ்ஜய் | 03 |
| 07 | கிரிதரன் கிரித்தீஸ் | 01 |
| | சிவகணேசன் மயூரேஷ் | 03 |
| | சௌந்தராஜன் ஹரிராம் | 03 |
| 08 | ஆனந்தகிருஷ்ணன் மதனகிருஷ்ணன் | 01 |
| | ஸ்ரீநிவாசன் அபிலாஷ் | 02 |
| | பாலமுரளி தினர்ஷன் | 03 |
| | உமாக்காந்தன் அர்ஜீன் | 03 |
| 09 | ஹரியேந்திரன் சஷ்டிகன் | 01 |
| | சந்திரமோகன் சஞ்சை | 02 |
| | கோணேஸ்வர் யுக்கேஷன் | 03 |
| | இராமநாதன் யகித்திரன் | 03 |
| 10 | நித்தியசீலன் குகேஸ் | 01 |
| | ஹரிகரன் திவ்யமேனன் | 02 |
| | ஸ்ரீநிவாசன் சந்தோஷ் | 03 |
| | மகேஸ்வரன் கிஷோநாத் | 03 |
| 11 | தெய்வேந்திரன் நிலோஜ் | 01 |
| | ஸ்ரீறஞ்சிதன் ஸ்ரீகஜாளன் | 02 |
| | சிங்கராஜா தனுஷன் | 03 |
| 12 Maths | சண்முகநாயகம் யுதிஸ்சன் | 01 |
| 12Maths | ஸ்ரீதரக்குமார் நிருசயன் | 02 |
| 13Com | சிவதாஸ் தேனுஷன் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மாலைகட்டதல் போட்டி

| போட்டிகள் | தரம் | வெற்றியாளர் | நிலை |
|---|---|---|---|
| சரம் கட்டுதல் | 06 | சேகர் லோஷான் | 01 |
| | | ஜீவராஜா பிரகதீஸ்வர் | 02 |
| | | உதயராஜா கோஷிகன் | 03 |
| மாலை கட்டுதல் | 07 | இரவிசரோசன் கிருத்திகேஷ் | 01 |
| | | கதிர்காமநாதன் நிலேஸ் | 02 |
| | | தவராசா ராகுல் | 03 |
| ஆண்டாள் மாலை | 08 | அன்பழகன் தக்சயன் | 01 |
| | | சற்சிவானந்தம் தனேஷ்வரன் | 02 |
| | | நேசராஜா கின் பிறைட்டன் | 03 |
| | | சிவகுமார் அருண் | 03 |

## 3. கோலப் போட்டி

| போட்டிகள் | தரம் | வெற்றியாளர் | நிலை |
|---|---|---|---|
| பூக்கோலம் | 09 | ஹரியேந்திரன் சஷ்டிகன் | 01 |
| | | பாலேந்திரன் கிருஜன் | 02 |
| | | மூர்த்தி ஹிந்துஜன் | 03 |
| | | கோகுலன் அநுசாந் | 03 |
| தேங்காய்ப்பூகோலம் | 10 | ஜெயசந்திரன் கிரித்திகன் | 01 |
| | | சிவகுமார் நிதர்ஷனன் | 02 |
| | | சரத்பாபு சஜீவ் | 03 |
| | | சத்தியசீலன் பிரவினன் | 03 |
| தானியகோலம் | 11 | திருச்செல்வம் சாருஜன் | 01 |
| | | மனோகரன் யோதீசன் | 02 |
| | | பிரபாகரன் தயாகரன் | 03 |
| | | கோணாமலை ஆதித்தன் | 03 |
| | | வியூசொய்ஷான் அபிஷேக் | 03 |
| மாக் கோலம் | உயர்தரம் | ரஞ்சித்குமார் விதுர்ஷன் | 01 |
| | | தங்கவடிவேல் சஜத்தனன் | 02 |
| | | பிரதீபன் பிரணவன் | 03 |
| | | தவலிங்கம் பிரசண்ணாத் | 03 |
| | | ஶ்ரீதரக்குமார் நிருசயன் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சமய அறிவுப் போட்டி

| தரம் | வெற்றியாளர் | நிலை |
|---|---|---|
| 06 | ஜீவராஜா பிரஹதீஸ்வரர் | 01 |
| | ஞானரூபன் ஹரித்பவன் | 02 |
| | சுகுணன் அபிராம் | 03 |
| 07 | கிரிதரன் கிரித்திஷ் | 01 |
| | குகேந்திரன் டாகீனீசன் | 02 |
| | பாலதாஸ் ஸ்வேதாரண்யன் | 03 |
| | கனகரெட்ணம் வியாபகன் | 03 |
| 08 | நவஜோதி வக்ஷன் | 01 |
| | சரவணபவன் தாமிரன் | 02 |
| | புஸ்பராஜா தனுஷ் | 03 |
| 09 | கோகுலன் அனுஷாந் | 01 |
| | சந்திரமோகன் ஷஞ்ஜய் | 02 |
| | பிரபாகரன் துஷீபன் | 03 |
| 10 | சிவகுமார் பிரவீன் | 01 |
| | முரளிதரன் செந்தூரன் | 02 |
| | சசிதரன் நெந்தூரன் | 02 |
| | நாகஜோதி பிரணவராஜ் | 02 |
| 11 | பிரபாகரன் தயாகரன் | 01 |
| | மாடசாமி குகதர்ஷன் | 02 |
| | மகேந்திரராஜா குருசாரங்கன் | 03 |
| 12 கணிதம் | கோவிந்தராஜா மிதுஷன் | 01 |
| 12 உயிரியல் | சிற்றரசு ராம்கீர்த்தனன் | 02 |
| 13 கலை | புனிதராஜா ரிதுர்ஷன் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கோலப் போட்டி

| தரம் | வெற்றியாளர் | நிலை |
|---|---|---|
| 06 | ஈஸ்வரக்குமார் ஷம்யுக்தன் | 01 |
| | ஜெய்ரூபன் பாஹறவன் | 02 |
| | பூரணசுந்தரம் ஜதாவ் | 03 |
| 07 | பாலதாஸ் ஸ்வேதாரண்யன் | 01 |
| | குகேந்திரன் யாகிநீசன் | 02 |
| | உமாமகேசன் லிதுர்சன் | 03 |
| 08 | வேல்முருகநாதன் கேதீஸ் | 01 |
| | ஆனந்தன் பிரதீஸன் | 02 |
| | கிருஷ்ணராஜா ஜதுஷிகன் | 03 |
| 09 | ஜெயரூபன் ரதீஷன் | 01 |
| | ஹறியேந்திரன் ஷஷ்டிகன் | 02 |
| | நேசரூபன் சைபியன் | 03 |
| 10 | யுவராஜா டினேஜிகன் | 01 |
| | சிறிஸ்காந்தன் விசாகன் | 02 |
| | ஶ்ரீதரன் நதீசன் | 03 |
| 11 | மகேந்திரராஜா குருசாரங்கன் | 01 |
| | தெய்வேந்தரராஜா வேணுஜன் | 02 |
| | சுரேஸ்குமார் தணிகைமாறன் | 03 |
| 12,13 | ரவிதாஸ் திமோஸ் | 01 |
| | கதிர்காமநாதன் பிரியலக்ஷன் | 02 |
| | கணேசமூர்த்தி கஜூஜன் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org